**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 26/2021**

**2025**ம் வருடம் நவம்பர் திங்கள் 03ம் நாள் பிரதிவாதிகள் தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு. வினோத் (DW1) கிராமம்:
தந்தை பெயர் : சுப்பிரமணியன் தொழில் :
வயது :

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>–

1. நான் கமுதி சோலார் நிறுவனத்தில் 2 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்வது நிமித்தம் சங்கதிகளை வழக்கறிஞரிடம் யார் கூறினார்கள் என்றால் தெரியாது.

2. வாதி ஒரு இலக்க சொத்தை பொறுத்து தாவா செய்துள்ளார். அந்த சொத்தின் சர்வே எண்கள, நான்கு புறமும் உள்ள சொத்துக்கள், தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.38/4A, வடக்கே ஒரு பள்ளியும், மற்ற மூன்று புறங்களிலும் காலி இடங்களும் உள்ளன. அந்த காலி இடங்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்திரணம் 33 சென்ட் ஆகும்.

3. வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் சொத்தின் விபரங்கள் உள்ள இடத்தில் தாவா சொத்தின் நான்குமால்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த நான்குமால்களில் உள்ள பகுதிகள் எதுவுமே எங்களது நிறுவனத்தின் கட்டமைப்புகளாக இல்லை என்றால் சரிதான். இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தால் நான்குமால்கள் பற்றிய விபரமும், தாவா சொத்தில் என்ன உள்ளன என்பதும் தெரியும் என்றால் சரிதான்.

4. தாவா சொத்தில் என்ன உள்ளது என்பதை இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னதாக சென்று பார்த்தேனா என்றால் ஆமாம், பார்த்தேன். தாவா சொத்து காலி இடமாக இருந்தது. தாவா சொத்தை கடந்த 6 மாதங்களுக்கு முன்னதாக சென்று பார்த்தேன். பொதுவாக கிராம நிர்வாக அலுவலரால்

பராமரித்து வருகிற அடங்கல் ஆவணத்தில் கிராமத்தில் உள்ள சொத்துக்களில் என்ன உள்ளது என்பது குறித்து குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். அந்த வகையில் தாவா சொத்தைப் பொறுத்தும் அடங்கல் ஆவணத்தில் குறிப்புகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த அடங்கல் ஆவணத்தை பார்வையிட நான் முயவில்லை என்றால் சரிதான்.

5. வாதி தரப்பில் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள நீ.ம.சா.ஆ.3 ஆவணமான அடங்கல் ஆவணத்தில் தாவா சொத்தில் உளுந்து பயிரிடப்பட்டிருப்பதாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக நீ.ம.சா.ஆ.1 ஆன "அ" பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். ஒரு சொத்து வாங்க வேண்டும் என்றால் பொதுவாக வில்லங்க சான்றிதழ் போட்டுப்பார்த்து அதன் பின்னர் தான் வாங்க வேண்டும் என்றால் சரிதான். எங்களது சோலார் நிறுவனமானது உலக பிரசித்தி பெற்ற நிறுவனம் என்பதால் எங்களது நிறுவனத்தின் சார்பாக சொத்துக்களை வாங்குவதற்கு சட்ட நிபுணத்துவம் வாய்ந்த வழக்கறிஞர் குழு உள்ளது என்றாலும், அவர்களது ஆலோசனையின் பேரில் சொத்து வாங்கப்படும் என்றாலும் சரிதான். எங்கள் நிறுவனத்தின் வல்லுநர் குழு அளித்த கருத்துரையின் படி தான் தாவா சொத்தை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான்.

6. தாவா சொத்தை வாங்குவதற்கு முன் எங்கள் நிறுவனத்திலிருந்து வில்லங்க சான்றிதழ் எடுத்துப் பார்த்ததாக எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதியானவர் தனது இளவல் மகனான இளங்கோவனை கட்டுப்படுத்தி 1ம் பிரதிவாதியிடமிருந்து 03.06.1991ம் தேதியன்று தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இளங்கோவன் 14.04.2006ம் தேதியன்று திருமணம் செய்து கொள்ளாமலேயே இறந்துவிட்டார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் நான் பார்வையிட்டுள்ளேன் என்றால் ஆமாம். பொதுவாக ஒரு

நபர் திருமணம் முடிக்காமல் இறந்துவிட்டால் அவருக்கு சேரவேண்டிய சொத்தானது அவரது தாய் தந்தை மற்றும் சகோதர சகோதரிகளுக்கு சென்றுவிடும் என்றால் சரிதான்.

7. தாவா சொத்தானது எங்களது நிறுவனத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தாவா சொத்தானது செங்கப்படை கிராமத்தில் அமைந்துள்ளதா என்றால் செங்கப்படை குரூப், பாம்புல்நாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. வாதியானவர் 1991ம் ஆண்டு தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற வகையில் பட்டா மாறுதல் செய்யாமல் மேற்படி சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஓட்டுக் கொட்டகை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் பார்வையிட்டிருந்தால் அந்த சொத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியும் என்றாலும், நான் தாவா சொத்தை பார்வையிடவில்லை என்பதால் தான் தற்போது தெரியாது என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு ஏற்கனவே கிரையம் செய்த நிலையில் அதே சொத்தை வேறு நபருக்கு கிரையம் செய்து கொடுக்க 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் மின் உற்பத்தி செய்யும் தொழிலை மட்டுமே செய்து வருகிறது என்றாலும், விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்திக் கொடுத்ததாக நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் பவர் ஏஜெண்டான அழகப்பன் என்பவர் எங்கள் நிறுவனத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்ததாக நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணமும் செல்லத்தகுந்தது என்றால் சரியல்ல.

9. 08.01.2016ம் தேதி 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த குத்தகை ஆவணம் (வா.சா.ஆ.7) செல்லத்தக்கது அல்ல என்றாலும், 29.04.2016ம் தேதி 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த

குத்தகை துணை ஆவணம் (வா.சா.ஆ.8) செல்லத்தக்கது அல்ல என்றாலும், 30.01.2011 ம் தேதி 7 ம் பிரதிவாதி 9 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த அடமான ஆவணம் (வா.சா.ஆ.9) செல்லத்தக்கது அல்ல என்றாலும், 23.02.2019 ம் தேதி 8 ம் பிரதிவாதி 9 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த திருத்தப்பட்ட அடமான ஆவணம் (வா.சா.ஆ.10) செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

10. வாதியானவர் அரசு வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 26.08.2021 ம் தேதி தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்று பெற்று உடனடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதீனம் தற்போது வரையில் வாதியின் வசம் உள்ளது என்றாலும், ஆதலால் தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றாலும் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.11.03 17:35:36 +0530